

திண்டுக்கல் மேற்கு மாவட்ட மாணவர்அணி, மகளிர்அணி ,ஒன்றிய, நகர, பேரூர் கழகத் துணை அமைப்பாளர் மற்றும் புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான நேர்காணல் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. நேர்காணலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டன்சத்திரம், வேடசந்தூர்,,நத்தம், குஜிலியம்பாறை பகுதிகளைச் சேர்ந்த புதிய மாணவர்அணி, மகளிர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பம் செய்தவர்கள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை ஒன்றியம் பாளையம்பட்டியில் 2கோடியே 18 லட்சம் . மதிப்பீட்டிலான புதிய வணிகவரித்துறை அலுவலக கட்டிடத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் பால கணேசன், பொன்ராஜ், நகர் செயலாளர் ஏ.கே.மணி, நகர்மன்ற தலைவி சுந்தர் லட்சுமி சிவப்பிரகாசம், மாவட்ட கவுன்சிலர் பாலச்சந்தர் மாநில நெசவாளர் அணி பழனிச்சாமி மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### சென்னையில் நடந்த விமானப்படையின் வான்வழி சாகச நிகழ்ச்சியைக் காணவந்து உயிரிழந்த

# 5 நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக். 8-

**சென்னையில் நடந்த விமானப்படையின் வான்வழி சாகச நிகழ்ச்சியைக் காணவந்து உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

நேற்று (06.10.2024) சென்னையில் இந்திய விமானப்படையினரால் சாகச நிகழ்ச்சி சென்னை மெரினா கடற்கரையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சிக்குத் தேவையான நிருவாகரீதியிலான ஒத்துழைப்பையும், வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக இந்திய விமானப்படை கோரியிருந்ததற்கு மேலாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்கென தமிழ்நாடு அரசின் காவல்துறை, தீயணைப்புத்துறை, சென்னை பெருநகர மாநகராட்சி, மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகிய முக்கியத் துறைகள் ஒருங்கிணைந்து சிறந்ததொரு நிகழ்ச்சியை சென்னை மக்களுக்கு வழங்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதனால் கூட்ட நெரிசல் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. இருப்பினும் எதிர்பார்த்த எண்ணிக்கையை விட மிகமிக அதிக அளவில் மக்கள் வந்திருந்ததால், நிகழ்ச்சி முடிந்த பின்னர் திரும்பச் செல்லும்போது மக்கள் தங்கள் வாகனங்களை அடைவதிலும், பொதுப்போக்குவரத்தைப் பெறுவதிலும் மிகுந்த சிரமம் அடைந்தனர் என்பதை அறிந்தேன். அடுத்தமுறை இதுபோன்ற பெரிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும்போது இவற்றில் கூடுதல் கவனமும் ஏற்பாடுகளும் செய்யப்படும்.

இந்நிகழ்வில், கடும் வெயில் மற்றும் பல்வேறு மருத்துவக் காரணங்களால் ஐந்து விலைமதிப்பற்ற உயிரிழப்புகள் ஏற்பட்டன என்பதை அறிந்து மிகுந்த மன வேதனையும், வருத்தமும் அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கு இத்தருணத்தில் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கத்தார் தலைநகர்

# தோஹா - திருச்சி இடையே கூடுதல் விமானச் சேவை!

## ஒன்றிய அமைச்சருக்கு - கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, அக்.8-

கத்தார் தலைநகர் தோஹாவிற்கும் - திருச்சிராப் பள்ளிக்கும் இடையே கூடுதல் விமானச் சேவை வழங்கிட ஆவன செய்யும்படி வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. ஒன்றிய சிவில் விமானத் துறை அமைச்சர் கிஞ்சரப்பு இராம்மோகன் ரெட்டி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-

ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகம் நமது நாடு பன்னாட்டு சுற்றுலாப் பயணி களுக்கு உள்நாட்டுப் பயணிகளுக்கும் விரும்பிப் பயணம் செய்யும் நாடாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது என்று தெரிவித்துள்ளது. இதனால் விமானப் பயணிகளின் எண்ணிக்கை கூடி வருவதால் அதற்கு இணையாக விமானச் சேவை யும் வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவிற்கு இந்திய சுற்றுலாப் பயணிகள் விரும்பிச் செல்லும் இடமாக உள்ளது. அங்குள்ள கட்டிடக்கலையின் வளர்ச்சி நிலவளம் சிறப்பான பண்பாடு மற்றும் கலாச்சாரங்கள் முதலானவை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய அம்சங்களைக் கொண்டுள்ளன.

தற்போது தோஹாவிற்கும், திருச்சிராப் பள்ளிக்கும் வாரத்திற்கு ஒரு நேரடி விமானச் சேவை மட்டும் உள்ளது. அதாவது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் காலை 10.00 மணிக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் ஒன்று மட்டும் இயங்கி வருகிறது. மற்ற தினங்களில் பயணம் செய்யும் பயணிகள் பல்வேறு இணைப்பு விமானங்களைத் தேடி அலையும் நிலை உள்ளது.

மேலும் கத்தார் நாட்டிற்கு தென்னகத்தில் இருந்து குறிப்பாகத் தமிழ் நாட்டிலிருந்து இருந்து அதிக எண்ணிக்கையிலான மக்கள் சென்று பணிபுரிந்து வருகின்றனர். இத்தகைய மக்கள் திருச்சிராப் பள்ளிக்கு நேரடி விமானச் சேவையைப் பெரிதும் விரும்பு கின்றனர்.

இதனால், தொடர்ந்து அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப, குறிப்பாக சுற்றுலா விற்கு உகந்த காலங்களில் தற்போதுள்ள வாரத்திற்கு ஒரு விமானம் என்றுள்ள விமானப் பயண சேவை போதுமானதாக இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு தோஹா நகருக்கும் திருச்சிக்கும் இடையே மேலும் கூடுதல் பயணிகள் விமானங்களை இயக்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. எழுதியுள்ளார்.

### இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டம்! 65 சதவீத நிதியை தருவதாக

# ஒன்றிய அரசு கூறியது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற நடத்தப்பட்ட நாடகம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 8-

இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்திற்கு 65 சதவீத நிதியை தருவதாக ஒன்றிய அரசு பீற்றிக் கொண்டது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற நடத்தப்பட்ட நாடகம் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டித்துள்ளது.


தினகரன்
ஒன்றியத்தின் நாடகம்

இதுகுறித்து 7.10.2024 ததிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது.

சென்னை மாநகரை பொருத்தவரை மெட்ரோ ரயில்களின் சேவை சிறப்பானது. குறித்த நேரத்தில் போக்குவரத்து நெருக்கடி இன்றி செல்வதில் மெட்ரோ ரயில்களுக்கு முக்கிய பங்குண்டு. இந்நிலையில் 116.1 கிமீ தூரத்தில், 124 ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் தற்போது மெட்ரோ 2ம் கட்ட பணிகள் நடந்து வருகின்றன. இதற்கான பட்ஜெட் 63,246 கோடி. வரும் 2028ம் ஆண்டுக்குள் சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ள நிலையில், திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பெரும் பிரச்சினையாக உள்ளது.

மாதவரம் முதல் சிப்காட் 2, லைட் ஹவுஸ் முதல் பூந்தமல்லி, மாதவரம் முதல் பூந்தமல்லி என மூன்று வழித்தடங்களை உள்ளடக்கி மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்ட பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. கடந்த 2020ம் ஆண்டே இதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில், ஒன்றிய அரசு தனது பங்கு நிதியாக ஒரு பைசா கூட வழங்காதது சிக்கலை ஏற்படுத்தியது. ஒன்றிய அரசு தனது பங்கை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஆனால் அது தமிழக அரசின் திட்டம் என ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வழக்கம் போல் தட்டி கழித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 29ம் தேதி டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கான நிதியை ஒதுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். இதைதொடர்ந்து கடந்த 4ம் தேதி டெல்லியில் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில், சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனால், ஒன்றிய அரசு விரைவில் நிதிஉதவி வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு தொகையான ரூ.63 ஆயிரத்து 246 கோடியையும் தாங்களே தருவது போல் ஒன்றிய அரசின் அறிவிப்பும் வெளிவர, அதை பாஜவினர் சமூகவலைதளங்களில் பரப்பினர். ஆனால், ஒன்றிய அரசின் பங்கு வெறும் ரூ.7,425 கோடி என்ற உண்மையும் வெளியானது. தங்களது பொய் இவ்வளவு சீக்கிரம் அம்பலமாகும் என்று பா.ஜ.வினர் எதிர்பார்க்கவில்லை. இந்த நிலையில்தான் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாக, ஒன்றிய அரசு தற்போது புதியதொரு விளக்கத்தை அளித்துள்ளது. இதில் மெட்ரோ பணிகளுக்கான மதிப்பீட்டு செலவில் ஒன்றிய அரசு 65 சதவீதத்தை வழங்குவதாகவும், இதில் ரூ.32 ஆயிரத்து 548 கோடியை ஒன்றிய அரசு பன்னாட்டு நிறுவனங்களிடம் கடனாக பெற்று வழங்கும் என கூறப்பட்டுள்ளது. அதாவது பன்னாட்டு முகமைகளிடம் பெறப்படும் கடன்கள் மாநில அரசுக்கானதாக இல்லாமல், ஒன்றிய அரசுக்கானதாக கருதப்படும்.

இக்கடனை திருப்பி செலுத்தும் பொறுப்பானது சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு அரசை சார்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் ரூ.7425 கோடி மட்டுமே ஒன்றிய அரசின் பங்களிப்பாக உள்ளது. மற்ற தொகை எல்லாம் கடன்தான். இதுவரை தமிழ்நாடு அரசு பன்னாட்டு முகமைகளிடம் இருந்து கடனை வாங்கி மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு தந்தது. ஆனால், இனிமேல் ஒன்றிய அரசு கடனை வாங்கி தரும்.

அதாவது கடனை வாங்கித்தரும் ஏஜென்டாகவே. ஒன்றிய அரசு செயல்பட உள்ளது. எப்படி பார்த்தாலும் கடனை திருப்பி செலுத்தும் பொறுப்பு தமிழ் நாடு அரசுக்குதான். நிலைமை இவ்வாறு இருக்க 65 சதவீத நிதியை தாங்கள் தருவதாக ஒன்றிய அரசு பீற்றிக் கொண்டது விந்தை. இது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற அரங்கேற்றப்பட்ட நாடகம். இதெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஏமாறமாட்டார்கள் என்பதை ஒன்றிய ஆட்சியாளர்கள் எப்போதுதான் உணருவார்களோ?

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### சிவகங்கையில் 32 மாணவர்களுக்கு

# 2 கோடி 10 லட்சம் ரூபாய் கல்விக்கடன்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, அக். 8 -

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகர் மருது பாண்டியர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான கல்விக் கடன் சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் . திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டுறவுத். துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் இந்த முகாமில் கலந்து கொண்டு 32 மாணவர்களுக்கு ரூபாய் 2 கோடியே 10 லட்சத்தில் கல்வி கடன் நிதி உதவி வழங்கி பேசியதாவது.

மாணவர்கள் நல்ல முறையில் கல்விகற்று வாழ்வில் உயர்வடைய வேண்டும். உயர் கல்வி பெறுவதற்காக அரசு கல்விக் கடன் வழங்கி வருகிறது.

இதுவரை 2260 மாணவர்களுக்கு ரூபாய் 35 கோடியே 64 லட்சம் கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. 3000 மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்க திட்டமிடப்பட் டுள்ளது. மாவட்டம் முழுவதும் இந்த முகாம்கள் நடத்தி கல்விக்கடன் நிதி உதவி வழங்கப்படும்.

மாணவர்கள் நன்கு படித்து வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னோடி வங்கி மேலாளர் எஸ் .பிரவின் குமார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி துணை மேலாளர் செல்வநாதன் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் அன்பு, திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த. சேங்கை மாறன், சிவகங்கை ஒன்றியக்குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர், சிவகங்கை நகர்மன்ற துணை தலைவர் எம். கார் கண்ணன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் உட்பட அரசு அதிகாரிகள் ஏராளமான மாணவ, மாணவிகள் பங்கேற்றார்கள்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் உள்ள அண்ணா சிலைக்கு துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலின் பதவியேற்றுள்ளதை முன்னிட்டு ஆற்காடு நகர செயலாளர் ஏ.வி.சரவணன் தலைமையில்மாலைஅணிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆற்காடு நகராட்சி தலைவர் தேவிபெனஸ் பாண்டியன், அவைத்தலைவர் பி.என்.எஸ். ராஜசேகரன், பொருளாளர் ஏ.ஏ.கே.கஜேந்திரன், துணை செயலாளர்கள் கே. சொக்கலிங்கம், ஏ.ஜி.ரவிக்குமார் எஸ்.ருக்குமணி மாவட்ட பிரதிநிதிகள் லிங்கேஷ், ஆர்.கோபி, ஏ.சிவா, நகரமன்ற உறுப்பினர்கள் தட்சிணாமூர்த்தி எஸ்.ஆர் .பி .துரை முன்னாபாய், வெற்றிவேல், ஆ.ப.கணேசன் பி.சசிகுமார், என்.நித்தியானந்தம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

திருவாரூர், அக். 8–

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் இன்று (08.10.2024 – செவ்வாய்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறவிருப்பதையொட்டி திருவாரூர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறியுள்ளதாவது,

இன்று (08.10.2024 –செவ்வாய்க்கிழமை) 10.00 காலை மணியளவில், நமது திருவாரூர் மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம், கழக அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் திருவாரூர் முத்துவேலர் அஞ்சுகம் நினைவரங்கத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாவட்ட கழகத்தின் பெயரால் வங்கிக்கணக்கு துவங்குதல், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன்எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதையொட்டி இடம் தேர்வு செய்யும் பணிகளை நாமக்கல் மாவட்டம், பொம்மைகுட்டை மேடு, லட்சுமி திருமண மண்டபம் அருகில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் தலைமையில், நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஸ் கண்ணன் முன்னிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், திட்ட இயக்குநர் கு.செல்வராசு, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆர்.பார்தீபன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் சிவக்குமார், நாமக்கல் வட்டாட்சியர் சினிவாசன், நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.